# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

## <u>MCOP. No.75/2024</u>

PW-1 லட்சுமி நாள்.22.01.2026

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

நான் விபத்தை பார்க்கவில்லை. என்மகனும், மருகளும் அடிப்பட்டு மருத்துவமனையில் இருக்கும்போது போய் பார்த்தேன். போலிசில் என்கணவர் புகார் கொடுத்தார். அவர் விபத்தை பார்க்கவில்லை. என்மகன் ஓட்டிசென்ற மோட்டார்சைக்கிள் அவருடையதாகும். விபத்தன்று என்மகனும், மருமகளும் மோட்டார்சைக்கிளில் கோவிலுக்கு போனார்கள். அவர்கள் அன்று ஹெல்மட் போடவில்லை என்றால் சரியல்ல. என்மகனுக்கும், மருமகளுக்கும் தலையில் அதிககாயங்கள் ஏற்பட்டு இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். பேருந்து மற்றும் மோட்டார்சைக்கிளின் சேதத்தை காட்டக்கூடிய மோட்டார் வாகனஆய்வாளர் அறிக்கை நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போன்று எதிர்மனுதாரரின் பேருந்து என்மகன் ஓட்டிசென்ற மோட்டார்சைக்கிள் மீது மோதவில்லை என்றும், விபத்திற்கும் எதிர்மனுதாரர் பேருந்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் 2, 3 நாட்கள் கழித்து நான் பேருந்தை பார்த்தேன். என்மகனுக்கு குழந்தைகள் இல்லை. என்மகனுக்கு இறக்கும்போது சுமார் 31 வயது இருக்கும். என்மருமகளுக்கு சுமார் 22 வயதிருக்கும். அவர்களின் வயதை காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்மகனின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்துள்ளேன். என்மகன் ஓட்டுநராக வேலைசெய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்மருமகள் மாதம் ரூ.12,000/- சம்பாதித்தாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால்சரியல்ல. விபத்து சம்மந்தமாக நான் குன்னம் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேன். என்மருமகள் உடன் பிறந்த அக்கா மற்றும் அண்ணன் மகள் உள்ளார்கள். எதிர்மனுதாரரின் பேருந்து ஓட்டுநர் மீது என்கணவர் பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றும், அதை அனுசரித்து இழப்பீடு பெறவேண்டி உண்மைக்கு மாறாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிர்மனுதாரருக்கும் தொடர்பில்லை என்பதால் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. என்மகன் மற்றும் மருமகள் வயது மற்றும் வருமானத்தை வழக்கிற்காக அதிகபடுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.